**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 190 of 2019 |

Depositions of PW -4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : தங்கவேல்

Father's Name : குப்புசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of January** 2026.

**(எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் சூலூர் தாலுகா ராசிபாளையத்தில் குடியிருந்து கொண்டு டைலர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2019 ஆம் வருடம் மாலை சுமார் 06.30 மணியளவில் டிபன்ஸ் காலனிக்கு இடம் பார்ப்பதற்காக நானும் கணேஷ்குமாரும் சென்று கொண்டிருந்த பொழுது டிபன்ஸ் காலனிக்கு வெளியே போலீசார் வாகன தணிக்கை மேற்கொண்டு இருந்தார்கள். அப்பொழுது அவ்வழியாக நம்பர் பிளேட் இல்லாத பல்சர் வாகனம் வந்தது. எங்கள் வாகனத்தை போலீசார் தடுத்து சோதனை செய்தார்கள். அப்பொழுது நம்பர் பிளேட் இல்லாத வாகனத்தையும் நிறுத்திய பொழுது மேற்படி நபர் தப்பித்து ஓட முயற்சித்தார். போலீசார் அவரை பிடித்து விசாரித்தார்கள். அவரிடம் இருந்து இரண்டு அல்லது மூன்று செயினை எடுத்தார்கள். பின்னர் எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்தார்கள். நானும் காவல் நிலையம்

உடன் வந்தேன்.

2. போலீசார் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்கள். நானும் அப்பொழுது உடன் இருந்தேன். என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னுடைய பெயர் மற்றும் விலாசம் கேட்டார்கள். எதிரியைப் பிடித்தற்காக என்னிடம் சாட்சி கழகம் செய்தார்கள் நானும் கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 23.06.2019 ம் தேதியன்று நானும் எனது நண்பர் கணேஷ்குமார் என்பவரும் காலை 06.30 மணிக்கு கோவை - திருச்சி மெயின் ரோட்டில் சூலூர் ஏர்போர்ஸ் DEFECE COLONY அருகில் சென்று கொண்டிருந்தபோது போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார் என்றும், அப்போது சுமார் 06.45 மணிக்கு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வேகமாக நம்பர் பிரேட் இல்லாத பல்சர் இருசக்கர வாகனத்தை நிறுத்தினார்கள் என்றும், அவரை பிடித்து விசாரித்தபோது எதிரி பல்வேறு இடங்களில் பல்வேறு தேதிகளில் திருடியதை ஒப்புகொண்டார் என்றும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலுத்தினை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும், மேலும் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு சாட்சியாக கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது வழக்கிற்காக மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.12 18:44:09 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**